உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் | துந்துபி௵ புரட்டாசி௴ | இதழ் |
| --- | --- | --- |
| 8 | 1922௵ செப்டம்பர்௴ | 6 |


உள்ளுறை பக்கம்.


சந்தானாசாரியர் சரித்திரம் ... ... ... 97

திருவாரூர் பங்குனி உத்தர மஹோற்சவம் ... ... 116

குமரன் ... ... ... ... 119


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Militray Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1922.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# சிவக்ஷேத்திராலய மகோற்சவ
# உண்மை விளக்கம்

இந்நூல் சிவவிளக்கம், க்ஷேத்திராலய விளக்கம், மகோற்சவ விளக்கம் என மூப்பாகங்களை யுடையது. இதில் அநேக ஞானார்த்தங்களைப் பற்பல அரிய நூற் பிரமாணங்களோடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதன் விலை அணா 8.

---

குசேலோபாக்கியானம்:—மூலமும் அரும்பதவுரையும் வசனமும் தமிழ் பயில விரும்புவோருக்கு இன்றியமையாத சிறந்த இலக்கியம். உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. விலை அணா 12.

---

சிவகாருண்ய ஒழுக்கம்:—இது ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது. இதில் உயிர், உலகம் இவற்றைப் பற்றியும், உயிர்களிடத்து செலுத்தவேண்டிய கருணையைப்பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இது படிப்போர் மனங் கசிந்துருகுந் தன்மையி லெழுதப்பட்டுள்ளது. விலை அணா 4.

---

சித்தாந்தப் பிரகாசிகை. விலை அணா 2.

"நவசக்தி" ஆபீஸ்,
இராயப்பேட்டை, சென்னை.

---

# திருவூறல் ஆலய தரும பரிபாலன சபை.

இச்சபை தேவாரம் பெற்றிருப்பதும், தக்கோலம் என வழங்கப்படுவதுமாகிய திருவூறலில் ஸ்ரீமத் சொக்கலிங்க சுவாமிகளால் தாபிக்கப் பெற்றுள்ளது. இதில் தக்கோலத் தலவாசிகளும் பிறருமாகப் பலர் கூடி சிவபுராண படனமும் தேவார பாராயணமும் செய்கிறார்கள்.

இத்தலத்தில் தொன்று தொட்டுப் பாதாள கங்கை திருநந்தி தேவர் திருவாயினிடமாக வெளிப்போந்து சிவபிரானை வலம் வருவதாகிய அற்புதம் இன்றும் காணப்படுகிறது. இத்தகைய அருமையான சிவதலத்தில் ஆலயம் தரிசிக்கச் செல்வோர் தலையில் இடிந்து விழக் கூடிய அவ்வளவு கிலமாயிருந்தும், இதைச் சீரணோத்தாரணம் செய்ய இதுகாறும் யாருக்கும் புண்ணியம் வாய்க்காமலிருப்பது அதிசயமே. சிற்சில ஆலயங்களுக்கே ஏராளமாகப் பணச் செலவு செய்து இடைவிடாமல் திருப்பணி நடத்தும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் இதை இதுகாறும் கவனியாதிருப்பது வருந்தத்தக்கதாம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| மலர் | துந்துபி௵ புரட்டாசி௴ | இதழ் |
|---|---|---|
| 8 | 1922௵ செப்டம்பர்௴ | 6 |


## தேவாரம்.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

---

## சந்தானாசாரியர் சரித்திரம்.

(தஞ்சைமாநகர்-ஸ்ரீமான் K. S. ஸ்ரீநிவாசப் பிள்ளையவர்கள் எழுதியது.)

சைவசமய சந்தானாசாரியார் யாவர் என்பதையும், அவர்களிருந்தகாலமும் அவர்கள் சரித்திரமும் எவையென்பதையு மாராய்வாம். சந்தான மென்னுஞ் சொல் பரம்பரை யென்று பொருள்படும். சைவ சந்தானம் கைலாய பரம்பரை. கைலாயத்தில் வேத சிவாகமங்களின் உண்மையைச் சிவபெருமானார் நந்திபெருமானுக் குணர்த்தியருளினர். அவர் சனற்குமார முனிவருக் குணர்த்தினர். அவர் சத்தியஞானதரிசனிகளுக் குணர்த்தினர். அவரிடத் துபதேசம்பெற்ற பரஞ்சோதி முனிவர் தென்றிசை நோக்கிவந்த காலத்துத் திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்ட தேவருக் குபதேசித்தனர். அவர் அருணந்தி சிவாசாரியாருக்கும் இவர் மறை ஞானசம்பந்த சிவாசாரியாருக்கும் இவர் உமாபதி சிவாசாரியாருக்கு முபதேசித்தனர். இந்தப் பரம்பரையில் தமிழ் நாட்டில் முதலி லுபதேசம் பெற்றவர்களாகிய மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் ஆகிய இந்நால்வருமே சைவசமய சந்தானா

சாரியரென வழங்கப்பெறுவர். உமாபதிசிவ மருளிய பின்கண்ட செய்யுள் இந்தப் பரம்பரையை யுணர்த்தும்.

"தேவர்பிரான் வளர்கயிலைக் காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவிய சத்தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியார் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறு
விரவுபக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே."

மெய்கண்டதேவர் நடுநாட்டிலுள்ள பெண்ணாகடமென்னும் ஊரில் கார்காத்த வேளாளர் வகுப்பில் அச்சுத களப்பாள கோத்திரத்தில் அவதரித்தவர். இவர் பிதாவின் பெயரை அச்சுதர் களப்பாளரென்று சிலர் எழுதுகின்றனர். அச்சுதகளப்பாளரென்பது கோத்திரத்தின் பெயரேயன்றி யிவர் பிதாவின் பெயரன்று. பெண்ணாகடம் என்பது தென்னாற்காட்டு ஜில்லாவில் விருத்தாசலத்து மேற்கு வெள்ளாற்றங் கரையிலுள்ள தோரூர். அவ்வூரில் கார்காத்த வேளாளர் குடும்பங்கள் சுமார் 150 - வரை யின்னு முள. அவர்களில் அச்சுத களப்பாள கோத்திரத்தினரு முளர். அச்சுத களப்பாளர்களுக்குக் குலதெய்வம் பெண்ணாகடத்திற்குக் காததூரம் தெற்கேயுள்ள செந்துறையென்னும் ஊரில் உளது. அவ்வூரில் இந்த கோத்திரத்தார் குடும்பங்கள் சுமார் 200-வரையுள. பக்கங்களிலுள்ள பல வூர்களிலும் இந்தக் கோத்திரத்தார் பலரிருக்கின்றனர். கார்காத்த வேளாளர் தங்கள் இனத்தவரைக் கோத்திரப்பெயராற் சுட்டுவது வழக்கம். ஒருவரை யொருவர் கோத்திரப் பெயரால் பூவனுடைப்பிள்ளை யிருக்கிறாரா, கோவுடைப்பிள்ளை யிருக்கிறாரா, அச்சுத களப்பாளப் பிள்ளை யிருக்கிறாரா வென்று விசாரிப்பதைக் கேட்கலாம். அவர்களியற்பெயரோ நடராஜ பிள்ளை, வேலாயுத பிள்ளை, கணபதி பிள்ளை யென்றிருக்கும். மெய்கண்ட தேவர் பிதாவும் அவ்வாறு அச்சுத களப்பாளர் என்றழைக்கப்பட்டிருப்பதியல்பே. மெய்கண்டதேவரும் அச்சுத களப்பாளரேயாம். அவர் பிதாவின் இயற்பெயர் தெரியவில்லை. அச்சுதகளப்பாளனொருவனைக் குறுக்கிச் சொல்வோர் களப்பாளன் என்றும், நீட்டிச்சொல்வோர் அச்சுத களப்பாள போஜனென்றும் சொல்வர். மெய்கண்ட தேவர் முன்னோர் குறுநிலமன்னரா யிருந்தனரென்று

நினைப்பதற் கிடமிருக்கிறது. பெண்ணுகடத்தில் களப்பாள னர சாண்ட மேடு என்றோர் தலத்தை யவ்வூரார் இன்றும் சுட்டுகின்ற னர். சிலர் சுருக்கமாய்க் களப்பாளன் மேடென்றும் சொல்லுவர்.

மெய்கண்ட தேவரது பிதா மற்றெல்லாச் செல்வத்தையும் பெற்றிருந்தும் பிள்ளைப் பேறில்லாமைக்காக வருந்தித் தன் குலகுரு வாகிய சகலாகம பண்டிதரை யடைந்து அக்குறை நீங்கு முபாயத் தைத் தனக்கருளும்படி பிரார்த்தித்தனர். அவர் தேவாரத்தில் கயிறு சாத்திப்பார்க்க "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையி னேடுள்ள நினை, வாயினவேவரம் பெறுவர்" என்னும் சம்பந்த மூர்த்திகளருளிய திருவெண் காட்டுப்பதிகம் கிடைத்தது. அவர் சீடனை நோக்கி நீர் திருவெண்காடு சென்று முக்குள நீர் படிந்து அருணவேணியாரையும் பிரம வித்தியாநாயகியையும் பணிந்தேத் திச் சிவனடியார்களுக்குப் பூசனை செய்யின் நன்மகவுப் பெறுவீ ரென்றனர். மெய்கண்ட தேவர் பிதா, மனைவியோடு திருவெண் காடு சென்று ஓராண்டு அங்குத்தங்கி குருபணித்தவாறே செய்து வர, சிவபிரானது திருவருளால் மெய்கண்டதேவ ரவதரித்தனர். அவருக்குச் சுவேதவனப் பெருமாள் என்று திருவெண்காட்டடி கள் பெயரையே வைத்து பெண்ணுகடத்தில் வசித்து வந்தனர். பெண்ணுகடத்துக்குக் கடந்தை யென்றும் பெயருண்டு. திருக் கடந்தைத்தலப் புராணத்தில் பின் கண்ட செய்யுளுளது.

"ஓங்குபுகழ்த் திருக்கடந்தை நகரில் வேளாண்
உயர்குலஞ்செய் பெருந்தவமோ ருருவுற் றோங்கு
வாங்குதிரைக் கடலுலகில் வந்து தோன்றி
மாதேவன் றிருவடியை மறவா நெஞ்சில்
பாங்குறநற் பரஞ்சோதி முனிவர் கூறும்
பதிபசுபா சத்திறனிப் பாரோர் தேர்ந்து
தீங்ககலச் சிவஞான போதஞ் சாற்றும்
செய்யமெய் கண்டார்தாள் சிரத்தில் வைப்பாம்."

சந்தானசாரிய புராண சங்கிரகத்திலும்,

"கடர்தைமா நகரமர்ந்த காராளர் தங்குலத்தில்
படர்ந்தநாம அச்சுத களப்பாளர் தம்பக்கல்"

என்பதும் இதை விளக்கும். மெய்கண்ட தேவர் கடந்தையில்வள ருங்காலத்து அவர் நன் மாமன் இவரிடத்து மிகவும் அன்பு பாராட் டித் தன்னூராகிய திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துக்

கொண்டுபோயினர். நன் மாமன் மிகச் செல்வவந்தர். பார்த்த யாவருளத்தையுங் கவரு மழகுடைய இந்தக் குழந்தையை விட்டுப்பிரிய அவருக்கு மனமில்லை. அவர் குழந்தைப் பருவத்திலிருப்பினும் முன் ஜன்மத்திற் செய்த தவ வலியினால் அதி தீவிர சத்திநிபாதப் பதமெய்தியவராய்த் தெருவில் மணலினால் சிவலிங்கமமைத்துப் பூசை செய்வதையே விளையாட்டாகக்கொண்டு ஒழுகுவாராயினர். இரண்டு வயது நடக்குங் காலையில் ஓர் நாள் இவர் அவ்வாறு விளையாடிக்கொண்டிருந்த சமயத்தில் கைலாய பரம்பரையில் நாம் மேற் குறித்துள்ள பரஞ்சோதி முனிவர் விமானம் மீதேறிக் கொண்டு மலையாசலத்தை நோக்கிச்செல்லுகையில் திருவெண்ணெய் நல்லூருக்கு நேர் மேலே வந்தவுடன் விமானம் செல்லாது நின்றுவிட்டது. பரஞ்சோதி முனிவர் ஞான திருஷ்டியால் பரமசிவன் திருவருள் இன்னதெனத் தேர்ந்து கீழிறங்கி சுவேதவனப் பெருமாளுக்கு உபதேசம் செய்து பின் பொதிகை சென்றனர். சந்தானாசாரிய புராண சங்கிரகத்தில் பின் கண்ட செய்யுளிதை யுணர்த்தும்.

> "தேர்ந்து தீக்கையு மெய்கண்ட நாமமுஞ் செறித்துச்
> சார்ந்த மந்தண மாஞ்சிவ ஞானபோ தத்தை
> யீந்து தங்குரு வறிவுறுத் தியபொழிப் பிசைத்தே
> யார்ந்த செந்தமி ழாக்கெனப் பொதிவரை யடைந்தான்"

திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயம் திருவருட்டுறை யென்னப்படும். திருவருட்டுறையில் பிராகாரத்தில் சிறுதளியில் பொல்லாப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்றனர். அவரிடத்துச் சிவஞானபோதத்தை நன்கு கேட்டுத்தெளிந்தனர். சிவஞான போதத்தைச் செவ்வனே யுணருவதற் குதவியாய் பொல்லாப் பிள்ளையார் சூரணைக்கொத்தென்னும் 39-வாக்கியங்களடங்கிய நூலையும் செய்தருளினர். தேவர் பிள்ளையாரிடத்தில் பாடங்கேட்குங் காலங்களில் தவிர மற்ற வேளைகளில் பேசாதிருந்ததனாலேயே யாவரும் அவரை ஊமைப்பிள்ளை யென்று கருதினர். பிள்ளையாரிடத்தில் அவர் பாடங்கேட்பதை யொருவருமறியார். தேவாது நன்மாமன் முதலாயினோரும் தேவர் பேசாதிருத்தற்காக வருந்தினர். ஒருநாள் கோயிலைத் திருக்காப்பிட்டுக்கொண்டு போன அர்ச்சகர் மீட்டும் வந்து தாம் மறதியினால் கோயிலில் வைத்துவிட்டுப்போனவொன்றை யெடுப்பதற் குள்ளே செல்லவும், அங்குண்டான சப்தத்தைக் கேட்டு இதற்குக் காரணமாவார் யாவரென்று பார்க்கப்

பொல்லாப்பிள்ளையார் தளிக்குப் பக்கத்தே சென்றனர். பொல்லாப்பிள்ளையார் பாடஞ்சொல்வதையும், ஊமையென்று யாவருங் கருதிய பிள்ளை பாடங்கேட்பதையுங் கண்டு இறும்பூதடைந்து வேகமாயோடி தேவர் நன்மாமனிடமதைத் தெரிவித்தனர். அவர் வீடு கோயிலுக்கருகே யுள்ளது. நன் மாமன் முதலியோர் அர்ச்சகர் வந்த வேகத்தையும் அவர் சொல்லும் வார்த்தையையுங் கேட்டு அவருக்குச் சித்தப்பிரமை யுண்டாயதெனக் கருதினர். அர்ச்சகர் மேலும் மேலும் வற்புறுத்திச்சொல்ல அவர் வார்த்தைக்கிணங்கி நன்மாமன் முதலியோர் பொல்லாப் பிள்ளையார் தளிக்குச் சென்று அர்ச்சகர் கூற்று உண்மையெனத் தேறினர். இனிப் பேசவேண்டுமென்று தேவரை யாவரும் பிரார்த்திக்க அன்று முதல் மற்றவரிடத்தும் தேவர் பேசத் தொடங்கினர்.

தேவர் குலகுருவாகிய திருத்துறையூர் சகலாகம பண்டிதர் சிஷ்யவர்க்கங்களோடு திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்று அவர்களுக்குப் பாடமோதி வருங்கால் சிஷ்யர்களில் ஒருவர் மெய்கண்ட தேவர் இருக்கும் வழிச்செல்ல, தேவ ரவரைக்கூவி யவர் பாடங்கேட்டதில் சில நுண்பொருள்களைக் கேட்க அவர் விடை கூற அறியாது மயங்கினர். தேவர் அவைகளைத் தெளிவுபெற விளக்கிக்காட்டி அன்றுமுதல் ஐயங்களைத் தன்னிடத்து வந்து அறிந்துகொண்டு போகும்படி கட்டளையிட்டருளினர். இதையறிந்த ஏனைய சிஷ்யர்களும் தேவரிடத்திலேவந்து பாடங்கேட்கலாயினர். சிஷ்யர்கள் தன்னிடத்துப் பாடங்கேட்க வாராது நின்றுவிட்டதற்குக் காரணத்தை விசாரித்தறிந்த சகலாகம பண்டிதர் தேவரிருக்குமிடம் வந்து பாடம்சொல்லும் சமயமாயிருந்ததைப் பார்த்துத் தேவரை யாணவமல மென்ப தியாதென வினவினர். சகலாகம பண்டிதர் அவ்வாறு வினயதற்குக் காரணம் குழந்தைப் பருவத்திலுள்ள தேவர் விஸ்தாரமாயுள்ள வேத சிவாகமங்களின் பொருள் நுட்பங்களை யறிந்திருப்பது சாத்தியமல்ல வென்னும் கருத்தும், தேவர் தன்னைப் பொருட்படுத்தா திருந்ததுமே. ஆணவ மலத்துக்கு இலக்கு பண்டிதரே யென்றுணருமாறு தேவரவரை நோக்க, தீவ்ர பக்குவியும் நன்கு கற்றவருமான பண்டிதர் தேவர் திருவுளத்தை யுணர்ந்து தேவர் பாதங்களில் தண்டம் சமர்ப்பித்துத் தன்னைக் காப்பாற்றியருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். தேவர் அவருக் குபதேசித்தருளினர். தேவரது 49-சிஷ்யர்களில் சகலாகம பண்டிதரே யாவரினும் மேம்பட்டவர்.

மெய்கண்ட தேவர் தம் குருவாகிய பரஞ்சோதி முனிவர் கட்டளைப்படி சிவஞானபோதச் சூத்திரங்களை வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்த்து அதற்கோர் வார்த்திகப் பொழிப்புரையும் எழுதினர். சிவஞானபோதத்தி லடங்கியுள்ள சூத்திரப் பாக்களின் விவரத்தைப் பின்கண்ட செய்யுட்க ளுணர்த்தும்.

"சூத்திரமீ ராறினுக்குச் சூரணைமுப் பானென்பான்
எத்தவெண்பா வெண்பானி ரண்டனைத்துஞ்—சேர்த்ததொகை
நூற்றுமுப்பான் மூன்றிவற்றை நண்ணுணர்வி னுய்ந்துணர்ந்தோர்
வேற்றுருக் கொள்ளா ருறவர் வீடு."

"ஐயொருப தேழேழு மாங்கமைந்த நாலாறு
மையொன்ப தோரெட்டோ டாறுறுந்—துய்யவெட்டோ
டெண்பத்து மொன்றுஞ் சிவஞான போதத்தின்
மன்னருளும் வெண்பா வகை."—வெண்பாத்தொகை.

"மூன்றுநான் கேழுமூன்றே முடிந்தபி னிரண்டிரண்டே
மூன்றுநான் மூன்றுநன்றாய் முடிந்தபி னிரண்டிரண்டே
யேன்றநான் கிறுதாமே யிவையிரா றிலக்கத்துள்ளே
யேன்றமுப் பானென்பானை யெனக்கரு ளிரங்கினனே."

—சூரணைத்தொகை.

சிவஞானபோத மூலம் 12 - சூத்திரங்களும் இருபத்தைந்தாவது ஆகமமாகிய ரௌரவத்தின் பகுதியெனச் சிலரும் சைவாகமங்கள் இருபத்தெட்டின் ஞானபாத ஸாரமெனச் சிலருங் கூறுகின்றனர். சிவஞானபோதம் அளவிற் சிறிதேயாயினும் யோக்கியதையில் மிகப்பெரிது. சிவஞானபோத வடமொழிச் சூத்திரம் பன்னிரண்டிற்கும் வட மொழி தென்மொழிக்கலைகளின் வரம்புக் கண்டவரும் பரமசித்தராயுமிருந்த சிவாக்கிரயோகிகள் என்னும் சான்றோர் மிக விரிந்ததும் சிறந்ததுமான வடமொழி பாஷ்யம் இயற்றியுள்ளார். அது சூரியனார் கோயில் மடத்தைச் சார்ந்த தக்ஷிணாமூர்த்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் நன் முயற்சியால் அச்சிடப்பட்டுளதாயினும் இன்னும் வெளி வரவில்லை. வெளிவரின் சைவர்களுக்குப் பேருபகாரமாகும்.

தென்மொழிச் சிவஞான போதத்திற்குப் பாண்டிப் பெருமாளியற்றிய வுரை யொன்று அச்சில் வெளி வந்துளது. திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்த சிவஞான முனிவர் அந்நூலுக்கியற்றிய சிற்றுரையொன்றும் விரிவுரையொன்றுமுள. விரிவுரையைச் சிவஞான பாஷ்யமெனக் கூறுவர். சிற்றுரை யச்சிடப்பட்டு எங்கு

முலவுகின்றது. விரிவுரையாகிய சிவஞான பாஷியத்தைத் திருவாவடுதுறை யாதீனத்தார் வெளிவிடாது சேமஞ்செய்து வைத்தமையால் அது வெகு காலம் வெளிவராதிருந்தது. ஆயினும் ஸ்ரீமான் மதுரை சுப்பிரமணிய பிள்ளையவர்களும் ஸ்ரீமான் சுவாமிநாத பண்டிதரவர்களும் தங்கள் முயற்சியால் எவ்வாறோ அதன் ஒரு பகுதியை யடைந்து உலகத்தார் பயனடையுமாறு இருவரும் தனித்தனியே யச்சிட்டு வெளியிட்டனர். சூரியனார் கோயிலாதீனத்தைச் சேர்ந்த இலக்கணத் தம்பிரான் சுவாமியவர்கள் இப்பொழுது சிவஞான பாஷிய முழுவதையும் அச்சில் வெளியிட்டிருக்கின்றனர். சைவ சித்தாந்தத்தை யுணர்த்தும் தமிழ் நூல்களில் சிவஞான பாஷியமே விரிவானது. இதன் சொன்னடை, பொருணடையமைதி தமிழில் சாதாரணப் பயிற்சியுடையார்க்குப் புலப்படுவதன்றாம். தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களினும் தமிழிலக்கியங்களிலும் தர்க்க சாஸ்திர முதலியவற்றினும் பயிற்சியுடையார்க்குப் புலப்படுவதாம். சைவர் பலர் ஆவலுடனிதைக் கிரயத்துக்குப் பெற்றுப் படித்தும் அதிலுள்ள பொருள் புலப்படாது தயங்குவதைப் பார்க்கலாம். சற்று வல்லார் யாரேனும் சிவஞான பாஷியத்தில் அடங்கியுள்ள பொருள்களை யறிய விரும்புவோர் இடர்ப்படாதுணருமாறு எளிய தமிழ் நடையில் எழுதி வெளியிடுவரேல் சைவர்கள் அவர்க்கு மிகவுங் கடப்பாடுடையவராவர். இக்காலத்தில் சைவ சித்தாந்தக் கொள்கைகளை யுணர்ந்த சைவர் பலரிருக்கின்றனரென்று நினைப்பதற்குச் சிறிதுமிடமில்லை.

மெய்கண்ட தேவர் கட்டளைப்படி யருணந்தி சிவாசாரியார் சிவஞான சித்தியார் என்றோர் நூலியற்றியிருக்கின்றனர். அது சிவஞான போதத்திற்குச் சிறந்த பாஷியமாம். இதனை

"என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளினாலே தாளிணை தலைமேற் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண் டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்."

என்று அருணந்தி சிவாசாரியர் கூறியதனா லுணர்க.

மெய்கண்ட தேவரது நன்மாமன் பெயர் முதலிய விவரங்களையிதுகாறும் நான் சொல்லவில்லை. ஸ்ரீமான் ஷண்முகசுந்தர முதலியாரவர்கள் பதிப்பித்த சிவஞானபோத நூலில் மெய்கண்ட தேவர்

தோற்றப் பிரபாவத்தில் சொல்லியுளவற்றால் மெய்கண்ட தேவரைத் தன்னூருக்கு அழைத்துச் சென்றவர் திருவெண்ணெய் நல்லூர் காங்கேய பூபதி யென்றறியலாம். காங்கேய பூபதியைச் சொல்லும் சோழமண்டலச் சதகச் செய்யுளும் அதன் மேற்கோள் செய்யுளும்

"கோலாகல மன்னரிலவன் போற் கொடுத்தே புகழுங் கொண்டாரா
மேலார் கௌடப் புலவனெனும் விழும்பேர்க் கூத்தன் முழுப்பேரா
னாலாயிரக் கோவையும் புனைய நவில் கென்றிசைத்து நாட்டுபுகழ்
மாலாமெனுங் காங்கயன் வாழ்வு வளஞ்சேர் சோழ மண்டலமே."

"புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களிறு கைக்குங் கவிராக்ஷத னெனப்
புவிக்குயர் கௌடப் புலவனு மாக்கி
வேறுமங்கல நாள்வியந்து காங்கயன் மேற்
கூறுநாலாயிரங் கோவை கொண் டுயர்ந்தோன்"

என்பன. செந்தமிழ்ப் பத்திரிகை மூன்றாவது தொகுதியில் பத்திரிகைக் கதிபராயிருந்த சேது சமஸ்தானம் வித்துவான் ஸ்ரீமான் ரா. இராகவய்யங்கா ரவர்கள் புதுவைச் சடையனென்பவரே வெண்ணெய் நல்லூர்ச் சடையனென்று தெளிவாய்க் காட்டியிருப்பதோடு சடையனது தந்தையாகிய சங்கரனுக்கு ஒட்டக்கூத்தர் முதலில் உதவித் தொழில் புரிந்து வந்தனரென்றும் அவரைக் காங்கேய னென்பான் கல்வி பயிற்றுவித்துக் கவிராக்ஷதனெனவுங் கௌடப் புலவனெனவும் சிறப்புப்பெயர்க ளடையச்செய்து மேம்படுத்தி, பின்னர் கூத்தர் தம்மேல் நாலாயிரக்கோவை பாடப்பெற்றனனென்றும் சொல்கின்றனர். சடையவள்ளலும் அவர் தந்தை சங்கரனும் புதுவையையுந் தங்கள் பதியாகக் கொண்டிருந்தனரென்பதைப் பின்கண்ட செய்யுளுங் காட்டும்.

"தருவுயர்ந்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன்
சங்கரன்றரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே."

காங்கயன் என்று மேற்கண்ட செய்யுட்களில் கண்டிருப்பது சடையவள்ளலைக் குறிப்பதாம். "புதுவைச் சடையனென்னுஞ் செய்யுளில் சடையன் என்னும் எழுவாய் கூத்தனை ஆக்கி, கோவை கொண்டு, உயர்ந்தோன் என முடிகின்றது. கோவைத் தலைவனாகிய காங்கயன்வேறு சடையன்வேறாயிருந்தால் காங்கயன்மீது பாடிய கோவையை சடையன் கொள்ளுதலும் அதனாலுயர்தலும்

எவ்வாறு கூடும்? காங்கேயன் என்பதற்கு கங்கை குலத்திலுதித்தவ னென்பது பொருளானால் கங்கை குலத்திலுதித்தவராகிய வேளாளர் அனைவரும் காங்கேயர்களே யாவர். காங்கேய பூபதி யென்பது வேளாண் மரபினராகிய பிரபு எனப் பொருள்படும். சடையவள்ளல் வேளாண்மரபில் சிறந்த பிரபு அன்றோ? காங்கேயனும் புதுவைக்கண் இருந்தவனென்று சொல்லப்பட்டிருக்கிறது (செந்தமிழ் III 4). ஸ்ரீமான் ஷண்முகசுந்தர முதலியார் பதிப்பில் வெண்ணெய் நல்லூர் காங்கேய பூபதி யென்றுளது. ஒரே காலத்தில் வெண்ணெய் நல்லூரில் ஒருசடையனும், ஒரு காங்கயனும், புதுவையில் ஒருசடையனும் ஒருகாங்கயனுமா இருந்தார்கள்? நான் பின்னெழுதுபவற்றையுஞ் சேர்த்து யோசித்தால் சடையனென்பதும் காங்கயனென்பதும் ஒருவரையே குறிக்குமென்பது தெளிவாம்.

மெய்கண்ட தேவர் இருந்தகாலத்தைத் தெரிந்து கொள்வதும் பிரகிருத விஷயத்தின் உண்மையை யறிவதற்குச் சகாயமாயிருக்குமாதலால் அதனை யீண்டு ஆராய்வோம். மெய்கண்ட தேவர் சிஷ்ய பரம்பரையில் நான்காமவராகிய உமாபதி சிவம் கடைசியில் இயற்றிய சங்கற்ப நிராகரணமென்னும் நூலில்,

"எழுஞ் சிருநூறு எடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்ப."

என்று அந்நூலிற் சொல்லியிருக்கும் வாதம் நிகழ்ந்த காலத்தைக் குறிக்கின்றனர். அது (1235+78) கி. பி. 1313-ம் ஆண்டாகும். இதற்கு நாலு தலைமுறைக்கு முன்னிருந்த மெய்கண்ட தேவர் பதின்மூன்றும் நூற்றாண்டின் துவக்கத்திலோ அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது அவ்விரண்டு காலங்களிலுமோ இருந்தவரெனக் கொள்வது தவறாகாது. திருவண்ணாமலையிலுள்ள கல்வெட்டு ஒன்றை ஸ்ரீமான் கோபிநாதராயரவர்கள் செந்தமிழ்த் தொகுதி III-பக்கம் 189-ல் வெளியிட்டிருக்கிறார்கள். அக் கல்வெட்டு சோழவரசன் ராஜராஜன் III ஆட்சி 16-ம் ஆண்டில் பொறிக்கப்பட்டது. ராஜராஜன் III பட்ட மடைந்தது கி. பி. 1216-ல் ஆதலால், இக் கல்வெட்டு கி. பி. 1232-ல் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது வலியவேளான் என்பானொருவன் திருவண்ணாமலையில் விக்கிரகஸ்தாபனம் செய்து தானங்கள் கொடுத்ததை யுணர்த்துவது. அதில் "திருவெண்ணெய் நல்லூ

ருடையான் மெய்கண்ட தேவன் ஊருடைய பெருமாளாகிய எடுத்தது வலியவேளர்" என்னும் சொற்றொடருளது. இச்சொற்றொடர் எடுத்தது வலியவேளர் மெய்கண்ட தேவர் ஊராகிய திருவெண்ணெய் நல்லூரின ரென்பதையும், இக் கல்வெட்டைப் பொறித்த (கி. பி 1232) காலத்துக்கு முன்னரே மெய்கண்ட தேவரது சிவஞானச் செல்வப் புகழ் ஓங்கிப் பரவியிருந்த தென்பதையும், எடுத்தது வலியவேளர் மெய்கண்ட தேவர் ஊரின ரென்று தம்மைச் சொல்லிக் கொள்வதை மிகப் பெருமையாக நினைத்திருந்தன ரென்பதையும் காட்டும். கோபிநாதராயரவர்கள் எடுத்தது வலியவேளர் என்பது மெய்கண்ட தேவரது மறுபெயரா யிருக்கலாமென்று கருதினர். அது ஒருவாற்றானும் பொருத்த முடையதன்று.

தேவர் அக்காலத் தடைந்திருந்த பெரும்புகழை யருணந்தி சிவாசாரியார் கூறியுள்ளனவற்றாலும் ஒருவாறு அறியலாம். அருணந்தி சிவாசாரியார் வடமொழிக் கலைக்கடல் தென்மொழிக் கலைக் கடல் என்னும் இருகடலையுமுண்டு சகலாகம பண்டிதரெனப் பெயர் பெற்று நடு நாட்டாரால் மிகவும் பாராட்டப் பெற்றவர். இவர் சென்ற விடங்களில் நகரத்தார் காவணங்களமைத்து வாழை தோரணங் கமுகு முதல் நாட்டி மற்ற மங்கலங்களையும் செய்து எதிர் கொண்டு அழைத்துச் சென்றனர் என்றும், இவர் பின்னரே சிவாகம முதலிய நூல்கள் பொதிந்த சகடம் 49 செல்வதுண் டென்றும் சொல்லுகின்றனர். அக்காலத்தில் சைவத்தை யறிய விரும்புவோர் இவரிடத்தே வந்து பாடமோதுவரென்றும் தெரிகிறது. இவரோ மெய் கண்ட தேவருக்குக் குலகுரு. ஜாதியில் பிராமணர். மெய் கண்ட தேவர் வேளாளர். சகலாகம பண்டிதரோ வயதில் முதிர்ந்தவர். மெய் கண்ட தேவர் மிக இளைஞர். அப்படியிருந்தும் தன்னைக் குல குருவாகக் கொண்டவர்கள் மற்றுமுள்ள அநேகர் முந்நிலையில் தேவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் பன்முறை செய்து பின் கண்டபடி பலவாறாய்ப் புகழ்ந்திருப்பது சிந்திக்கத்தக்கது. அவையாவன,

"கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும்—வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான்"

"வெண்ணெய்வாழ் மன்னவா வென்னுடைய
மாலையா மாற்றமதி"

"மதிநுதல் பாகனாகிக் கதிதர
வெண்ணெய்த் தோன்றி நண்ணியுள் புகுந்தென்
னுளம்வெளி செய்துன்னளவில் காட்சிக்
காட்டி யெற் காட்டினை"

"செடிய னேனையும் மடிமைசெய்யப்
படிவங்கொண்டு வடிவு காட்டில்லாப்
பெண்ணையாளும் வெண்ணெய் மெய்ய"

"வெண்ணெய்க் கரும்பே யென் கண்ணே"

"திரிமலந் தீர்த்த தேசிக"

"என்வினை வேரறப்பரித்த மெய்கண்டதேவே"

"நாயினேற்கு நன்று மன்மாயக்
கருமமுங் கரும பந்தமுந்
தெருளவருளுஞ் சிவ பெருமானே"

"அண்டவான அருட் பெருங்கடலே"

இவ்வாறுள்ளன இன்னும் பல. தமிழுலகத்தில் சைவர் யாவரும் சந்தானசாரியரில் இவரை முதல்வராகக் கொண்டனர். இவரியற்றிய சிவானபோதம் வேதங்களினும் மேலாக அவர்களால் பாராட்டப்படுகிறது. சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கிற்கும் தலை நூல் இதுவே. மெய் கண்ட தேவரை நாட்டாரும், அவர்களால் மதிக்கப்பெற்ற சகலாகம பண்டிதர் போன்றாரும், எடுத்தது வலிய வேளர் போன்ற சீமான்களும் இவ்வாறு சிறப்பிப்பரென்றால் அவர் நன் மாமன் குடும்பத்தினரும் அவரைச் சார்ந்தாரும் கொண்டாடாது விடுவரோ? இவரைப் பேரன்போடு வளர்த்து வந்த தாய்மாமன் முதலானோர்க்கு இவர் தம்மரபினுதித்தது எத்துணைப் பெருமையைச்செய்யும். தேவர் நன் மாமன் குடும்பத்தாரால் இளமைப் பருவ முதலாதரிக்கப்பெற்று அக்குடும்பத்தி லொருவராய் வளர்ந்த கம்பர் தாமியற்றிய இராமாயணத்தில் சடையவள்ளலையும் அவரது தந்தை சங்கரன் முதலிய குடும்பத்தினரையும் பல விடங்களில் புகழ்ந்திருப்பவர் தேவரைப் புகழாது விடுவரோ? கம்பர் சடைய வள்ளல் குடும்பத்தில் ஓர் அங்கத்தினர் போல கருதப்பட்டனர் என்பது அவரும் சடைய வள்ளல் தம்பி யிணையாரமார்பனும் பாண்டியனிடத்துச் சென்ற காலத்து இணையார மார்பனை யிவர் யாரெனப் பாண்டியன் வினவ, கம்பர் விடுத்த விடையதை விளக்கும். அதாவது,

" என்னுடைய தம்பி சரராமனுக் கிளையான்
கன்னன் மதயானைக் கண்டன் மகன்."

ஈண்டு சரராமனென்பது சடையவள்ளலது மற்றொரு பெயராம். கம்பர் சடையவள்ளலையும் அவர் தந்தை சங்கரன் முதலியோரையும் புகழ்ந்திருப்பதில் சிலவற்றைக் குறிக்கின்றேன்.

" சடையன் வெண்ணெய் நல்லூர் வயிற்றகத்தே."

" மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லே யன்ன படைக்கல மருளி னானே."

" பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால்."

" சடையன் வெண்ணெய்யிற்
றஞ்சமென்றோர் களைத்தாங்குந் தன்மை போல்."

" வள்ளற் சடையனே யனைய சான்றோர்."

" சங்கர னனைய சான்றோர்."

இவ்விதம் சடையவள்ளல் குடும்பத்தினரைப் புகழ்ந்து பாடிய கம்பர், அம்மரபினர் செய்த பெருந் தவப்பேறு யவதரித்தவரும் அவர்களால் பேரன்புடன் பெரிதும் போற்றப்பெற்றவரும், தாம் அவதரித்ததால் அம்மரபுக்கு அழியாப் பெரும் சிறப்பைச் செய்தவரும், யாவராலும் பேரருமைச் சிவஞானச் செல்வரெனக் கொண்டாடப்பட்டுச் சைவ சமய சந்தானாசாரியரில் முதல்வராய் விளங்குபவருமாகிய மெய்கண்டதேவரை, முடிசூட்டுபடலத்தில்,

" அரியணையநு மன்றாங்க வங்கதனுடை வாளேந்தப்
பரதன்வெண் குடைகவிக்க விருவருங் கவரிவீச
உரிமையி னயோத்தியுள்ளா ருரைசெயவெண் காடன்வந்த
மரபுளோர் கொடுக்கவாங்கி வசிட்டனே புனைந்தான் மோலி."

என்று புகழ்ந்தனர்.

ஈண்டு வெண்காடனென்றது சுவேதவனப் பெருமாளென்னும் பெயர் தாங்கிய மெய்கண்ட தேவரை, (செந்தமிழ் III 48, 49-ல் பார்க்க). வேறு பாடமோதுவாரு முளர்.

மெய்கண்ட தேவருக்குத் திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறைக்குப் பக்கத்தில் கோயிலமைக்கப்பட்டுளது. தேவர் பூஜைக்குப் போதுமான வருவாயுள்ள பூமி விடப்பட்டு அது திருவாவடுதுறை யாதீனத்தார் விசாரணையி லிருந்து வருகின்றது.

நான் அவ்விடம் சென்றகாலத்து மேற்படி யாதீனத்துக் கட்டளைத் தம்பிரான் சுவாமி தேவர் விக்கிரகத்துக்கு வெகு பக்தி சிரத்தை யுடன் விமரிசையாய் பூஜை செய்துகொண்டு வருவதைப் பார்த்தேன். தேவர் விக்கிரகம் தரிசிப்போர் உள்ளத்தைக் கவர்வது. அவ்வூரார் தேவருக்கு வேண்டிக் கொள்வதையும் பூஜை யர்ச்சனை முதலியன நடத்துவிப்பதையும் அடிக்கடி பார்க்கலாம். ஜனங்கள் தங்களுக்கு நேரிடும் எல்லா இடுக்கண்களுக்கும் பரிகாரமாய் தேவர் விபூதிப் பிரசாதத்தை வேண்டுகின்றனர். கட்டளைத் தம்பிரான் சுவாமி மெய்கண்ட தேவராலயத்துக்கு எதிரில் சற்று தூரத்தில் திருவருட்டுறைக்குப் பக்கத்துள்ள திடல் பூமியை தேவர் நன் மாமன் சடையவள்ளல் அரண்மனையிருந்த விடமெனக் காட்டினர். இதுகாறும் சொல்லியவற்றால் மெய்கண்ட தேவர் தாயுடன் பிறந்த மாமன் சடையவள்ளல் என்பது தெளிவாகும்.

இனிக் கம்பர் பாடியகால மென்னவென்று பார்ப்போம். ஸ்ரீமான் ரா. இராகவய்யங்காரவர்கள் செந்தமிழ்த் தொகுதி மூன்றில் இராமாயணம் அரங்கேற்றப்பட்ட காலம் கி. பி. 1185 என்பதை விரிவாயும் தெளிவாயுங் காட்டி யிருக்கின்றார்கள். மெய்கண்டதேவர் கி. பி. 1185-ல் இளம்பருவ முடையராயிருந்திருத்தல் வேண்டும்.

## அருணந்தி சிவாசாரியர்

இனி, யருணந்தி சிவாசாரியாரைப்பற்றி விசாரிப்போம். இவர் நடுநாட்டில் திருத்துறையூரில் ஆதிசைவர் குலத்தி லவதரித்தவர். மெய்கண்ட தேவர் குடும்பமுதலிய அந்நாட்டிலுள்ள அநேக குடும்பத்தினர்க்கு குலகுரு. வடமொழி, தென்மொழி யிரண்டிலுமுள்ள கலைகளை முற்றக்கற்றவர். வேத சிவாகமங்களில் அகன்ற ஆழ்ந்த பயிற்சி யுடையவர். யாவரும் பெரிதும் மதித்து விரிவாயுள்ள சகலாகமங்களிலும் இவருக்குள்ள சிறந்த அறிவை மெச்சி சகலாகம பண்டிதர் எனக் கூறுவாராயினர். இவரிடத்து ஆகமபாடங் கேட்போர் பலரென்றும், நாட்டினர் இவரை மிக்க மரியாதையுடன் நடத்தினரென்றும் தெரிகிறது. மெய்கண்ட தேவரது தந்தை பிள்ளைப் பேறில்லாது வருந்திய காலத்து சகலாகம பண்டிதரை யடைந்து பிரார்த்தித்தால் தங்குறை தீரும் என நம்பி யவரிடம் செல்ல அவர் தேவாரத்தில் கயிறு சாத்தி "பிள்ளையினோடுள்ள நினைவாயினவே வரம் பெறுவர்" என்றகப்பட்டதும் அவரைத் திருவெண்காடு சென்று முக்குள நீர்படிந்து திருவெண்காட்டா

ரைத் தொழும்படி யாக்ஞாபித்தார். அவரும் அவ்வாறே செய்து தேவரைப் பெற்றனர்.

தேவரிடத் துபதேசம் பெற்ற பின்னர் அவர் கட்டளைப்படி சிவஞான சித்தியார் என்னும் நூலைச் செய்ததன்றி இருபாவிரு பஃது என்னும் மற்றொரு நூலையுஞ் செய்தனர். சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் 14-ல் சித்தாந்தக் கொள்கைகளனைத்தையும் ஒருங்கு சேரத் தெளிவாயும் விரிவாயுங் கூறுவது சிவஞான சித்தியாரே. சித்தாந்த சாஸ்திரங் கற்க முயல்வோர் சித்தியாரைப் படிப்பதில் பெருவிருப்ப முடையவராயிருப்பர். அந்நூலின் பொருளமைதி யாவராலும் போற்றப்படுவதாயிருப்பதோடு அதன் சொற்றொடரமைதி மூர்க்கனதுள்ளத்தையுங் கரையச் செய்யும். இவரது பெருமையை நோக்கியன்றோ உமாபதிசிவம் "மாறுவிரவு புகழருணந்தி விறலார்" என்று கூறினர். தாயுமான சுவாமிகள் தங்குருவைத் தோத்திரிக்குமிடத்து "வீறு சிவஞான சித்தி நெறி மௌனோபதேச குருவே" யென்றும், குரு பரம்பரை கூறுமிடத்து அருணந்தி சிவாசாரியாரையுஞ் சித்தியாரையுங் குறிப்பிட்டு "பாதி விருத்தத்தாலிப்பார் விருத்தமாக வுண்மை—சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவதெந்நாளோ" என்றும் கூறியிருப்பது சிவஞான சித்தியாரின் உயர்வுக்கு ஒரு சான்றாம்.

இவர்பா லுபதேசம் பெற்றவர் மறைஞான சம்பந்த சிவாசாரியார். இவர் பெண்ணாகடத்தி லாதிசைவர் குலத்தில் உதித்தவர்.

திருக்கடந்தைப் புராணம்.

"வாய்ந்த புகழ் மெய்கண்ட தேவருக்கு
மாணாக்க ரருணந்தி தேவர் தம்பால்
ஆய்ந்த பலகலை யோதித்தமை யடைந்த
வருள்பெருகு கொற்றவன்றன் குடியில் வாழும்
காய்ந்தபவத் துமாபதி தேவருக்கு ஞானம்
கவினவுரைத் தருள்செய்யுங் கடந்தை வந்த
எய்ந்த தவத்துயர்ந்த மறைஞான தேவர்
இணைமலர்த்தா ளெஞ்ஞான்று மிறைஞ்சுவாமே"

உமாபதிசிவம் இவரிடத்துபதேசம் பெற்றதைச் சொல்லுமிடத்து இவர் விருத்தாந்தமும் சொல்லப்படும்.

உமாபதிசிவம்

இவர் தில்லைவாழ்ந்தணர் குலத்துதித்தவர். வடமொழி தென்மொழியிரண்டிலுந் தேர்ந்த கல்வியறிவுடையவர். இவர்

பகல் தீவட்டி முதலிய விருதுக்களுடன் திருக்களாஞ்சேரி யென்னு மூர் வழியே செல்லுகையில் அவ்வழிக்கருகேயிருந்த மறைஞான சம்பந்த சிவாசாரியார் "பகற்குருடன் போகின்று" னென்ன அதைக்கேட்ட உமாபதி சிவம் அதிதீவிர சத்திபதிந்தவ ராகையாலும், பிறவிப்பிணியை யொழிக்குங் காலங்குறுகியதாலும், உடனே தன் சிவிகை விட்டிறங்கி, மிக்க விநயத்துடன் அப்பெரி யாரை வணங்கி, அவர் புசித்துக் கொண்டிருந்த கூழ் ஒழுகுவதைக் கீழே விழ வொட்டாமல் ஏந்தித் தாம் பேரன்புடன் புசித்தனர். இவரது முதிர்ந்த பக்குவத்தைக்கண்ட மறைஞான சம்பந்த சிவா சாரியார் இவருக்கு ஞானோபதேசஞ் செய்தருளினர். நிகழ்ந்த வற்றைக் கேள்வியுற்ற தில்லைவாழந்தணர் உமாபதிசிவத்தைத் தம் மினத்தினின்றும், நீக்க இவர் சிதம்பரத்திற் கருகிலுள்ள கொற்ற வன் குடியில் வசித்து வந்தனர். அதனால் இவருக்குக் கொற்றவன் குடி யுமாபதி சிவாசாரியாரென்னும் பெயர் வழங்கலாயிற்று.

சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கில் எட்டு இவரா லியற்றப்பெற்றன. அவை சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பவையாம். இவற்றையன்றித் தென்மொழியில் கோயிற்புராணம், திருத்தொண் டர் புராணசாரம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புரா ணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை ஆகிய நூல்களையும் வடமொழியில் பௌட்கராகமத்துக்கு விருத்தியொன்றும் எழு தினர்.

கொற்றவன் குடியில் உமாபதி சிவம் வசித்துவருங்காலத்தில் இவர் நடராஜாவுக்குச் செய்ய வேண்டிய பூஜைமுறை வருதலும் அதைச் செய்வதற்குத் தில்லை சென்றனர். தீக்ஷிதர்கள் உமாபதி சிவம் பூஜை முறையுரிமையை யிழந்துவிட்டனரென்றும் இவர் நடராஜா சந்நிதிக்குச் செல்லுதல் கூடாதென்றும் தடுக்க உமாபதி சிவம் சிந்தை நொந்து ஓர் மடத்திற்றங்கி நடராஜாவுக்குப் பேரன் புடன் மானதபூஜை செய்வாராயினர். தீக்ஷிதர்கள் இவர் பூஜை முறையைத் தாங்கள் செய்வதற்காக நடராஜா சந்நிதிக்குட்சென்று பேடகத்தில் நடராஜாவைக்காணாது தியக்கமுறுங் காலையில்,

"மெய்ம்முறை வேத நாதன் விண்ணிடை விளம்பலுற்றான்
தன்முறைப் பூசை யாற்றுந் தகுதிசா லுமாப திப்பே
ரம்மறை யோனம் மன்ப னவனிடை யமர்ந்தோ மென்றான்"

தீக்ஷிதர்கள் இதைக்கேட்ட பின்னர் தம்மையம் நீங்கி யுமாபதி சிவம் இருக்குமிடத்தைச் சார்ந்து அவரை யடிபணிந்து வணங்கி நாங்கள் அறியாமையாற் செய்தவற்றைப் பொறுத்தருளி நடராஜாவுக்குத் தாங்கள் செய்யவேண்டிய பூஜை முறையை இப்பொழுதே வந்து செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தனர். உமாபதி சிவமும் சந்நிதி சென்று பூஜையைச் செய்தனர்.

ஒருகால், சபாநாயகருக்குத் திருவிழா நேரிட்டகாலத்து தீக்ஷிதர்கள் வழக்கம்போல் கோபுரவாசற் கொடி யேற்றுவதற்குப் பலவாருய் முயன்றும் கொடியேருது அவர்கள் முயற்சிகள் பாழ்போயின. துன்புற்று மனந்திகைத்திருக்கும் தீக்ஷிதர்கள் கனவில் “உமாபதி சிவம் வந்தாற் கொடியேறும்” என்று அம்பலவாண னருளிச்செய்ய அவர்கள் கொற்றவன் குடி சென்று கனவிற் ருங்கண்டதை யுமாபதி சிவத்துக் கறிவித்துத் தில்லைக்குவந்து கொடி யேறும்படி யருளிச்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்க உமாபதி சிவ மதற்கிணங்கித் தில்லைசென்று “கொடிக்கவி” யென்னும் நான்கு செய்யுட்களடங்கிய சிறுநூலைப் பாடியருளினர். உடனே கொடியேறி விழா நடந்தது. அந்நூலில் உமாபதிசிவம்,

“ * * * அருளாளா
நீபுரவாவைய மெலாநீ யறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.”

என்று சொல்கின்றனர்.

அந்திம சாதியிலுதித்த பெத்தான் சாம்பான் என்னும் பரம சிவபக்தர் பரமசிவனுக்குப் பணி செய்வதில் பேரன்புபூண்டு விறகு வெட்டிக் கோயில் மடைப்பள்ளிக்குச் செல்ல அந்தணர்களவரைத் தடுத்தலும் அவர் மிக்க துயருற்றுத் திரும்பிச் சென்றனர். சிவபெருமான் அவர் கனவில்தோன்றி, திருமுகங்கொடுத் தருளினர்.

“என்பா லன்பாரு மாபதிவா ழெழிலார் கொற்ற வன்குடியி
லன்பா லேகிப் பணியியற்றி யளித்தி யாலித் திருமுகத்தைத்
துன்பார் மலக்கூ டகல்வித்துத் தூயமுத்தி தனை நல்கும்
நின்பா லன்பா யெனவுரைத்து நீத்தார் பொன்னம் பலக்கிழவர்.”

பெத்தான் சாம்பன் விழித்தெழுந்து சிவபிரானருளிய திருமுகத்தைக் கண்ணுற்று ஆநந்த பரவசராய் அன்றுமுதல் உமாபதி சிவத்தின் மடைப்பள்ளிக்கு விறகுகொண்டுபோய்க் கொடுத்துவந்தனர். ஒருநாள் அதிகமழைபெய்து ஆற்றில் வெள்ளம் பெருகிய

தால் ஆற்றைக்கடந்து சென்று கொற்றவன் குடி உமாபதி சிவத்தின் மடைப்பள்ளியில் விறகுக்குறைவறுக்கச் சாம்பானுக் கியலாதாயிற்று. அதனால் அன்று அமுதமைக்கத் தாழ்த்தது. உமாபதி சிவம் தாழ்த்த காரணத்தை வினவியபொழுது பெத்தான் சாம்பான் தினந்தோறு முட்டாது விறகுக்குறைவறுத்து வந்தது தெரிந்து இனிச் சாம்பான் வந்தால் தமக்கறிவிக்கும் வண்ணம் கட்டளையிட்டனர். மறுநாட் காலையில் சாம்பான் வந்ததை யேனையோரறிவிக்க உமாபதி சிவம் அவரை யழைப்பித்து நீ யார், என்ன நோக்கத்தோடும் விறகு மடைப்பள்ளிக்குக் கொடுத்து வருகின்றனையென்று உசாவ, சாம்பான் சிவபெருமான் கொடுத்த திருமுகத்தைக் கீழ்வைத்துத் தானும் கீழ்வீழ்ந்து தண்டம்சமர்ப்பித்தனர்— உமாபதி சிவம் திருமுகத்தை வாங்கி வாசிக்க அது பின் கண்டவாறு இருந்தது.

"அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு—படியின்மிசைப்
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்கை முறை"

உமாபதி சிவம் அந்தத் திருமுகத்தைச் சிரமேல் வைத்து கைகளைக்கூப்பி யேற்றித் தொழுது கண்களில், ஒற்றிக்கொண்டு புளகாங்கிதராய் நடனஞ் செய்து பெருமகிழ்ச்சியி லாழ்ந்தனர். பின்னர் பெத்தான் சாம்பானுக்கு அடங்காத அன்போடும் சத்தியோ நிர்வாண தீக்ஷையை நயனத்தால் செய்தனர். சித்தியாரில் அந்த தீக்ஷையைச் சொல்லும் செய்யுள்—

"பாலரொடு வாலீசர் விருத்தர்பிணி மொழியார்
பலபோகத் தவர்வியாதிப் பட்டவர்க்குப் பண்ணும்
சீலமது நிற்பீசஞ் சமயா சாரந்
திகழ்சுத்தி சமயி புத்திரர்க்கு நித்தத்
தேலுமதி காரத்தை யியற்றித் தானும்
எழிலிரதி காரையென நின்றிரண்டாய் விளங்கும்
சாலநிகழ் தேகபா தத்தி னோடு
சத்திய நிர்வாண மெனச்சாற்றுங் காலே"

இவ்வாறு தீக்ஷை பெறவே சாம்பானது ஆன்மா சோதி வடிவாய் மேல் கிளம்பிச் சென்றது—இதனுண்மையை யறியாத சாம்பான் மனைவி யரசனிடத்துச் சென்று உமாபதி சிவம் தன்

நாயகனை நெருப்பில் கொளுத்திக் கொன்றுவிட்டதாக முறையிட்டனன். அரசன் உமாபதி சிவத்தின் பெருமையை யொருவாறு அறிந்தவனாதலால் அவரிடஞ் சென்று சாம்பான் மனைவியின் முறைப்பாட்டுக்குக் காரணமென்னென்று வினவ, உமாபதிசிவம் தான் சாம்பானுக்குச் சத்தியோ நிர்வாண தீக்ஷை செய்ததையும் பின்னர் நிகழ்ந்ததையுங் கூறியருளினர் — அரசன் அதிசயித்து இன்றும் அந்த தீக்ஷையை யொருவருக்குச் செய்தருளல் வேண்டுமென்று வேண்ட உமாபதிசிவம் பக்கத்தில் சுற்றியுள்ளாரை நோக்கித் தீக்ஷை பெறுதற்குரியராய்ச் சத்திபதிந்தவர்கள் ஒருவரையுங் காணேம். ஆயினும் பக்கத்தே முள்ளிச்செடி யொன்றுளது. அது சிவனடியார் பூஜை ஜலத்தால் வளர்ந்து சிவனடியாருணவிற்கு முட்டாது காயுதவிவந்ததனால் தீவிர சத்தி பதிந்ததாயுளது. அது தீக்ஷக்குரியதென்றார். அரசன் அதற்கு தீக்ஷை செய்யும்படி வேண்ட உமாபதிசிவம் நயனத்தால் சத்தியோ நிர்வாண தீக்ஷை செய்தனர். சந்தானசாரியப் புராண சங்கிரகச் செய்யுள்.

"என்றுரை புகன்றேயந்த வெழிலுமாபதி யார்முள்ளித்
தன்றனி யுருவநோக்கத் தகைபெறு சோதியாகி
யன்றரசனை புள்ளிட்டா ரரகரவெனச் சேவிப்பச்
சென்றுயர் விசும்பிலேகிச் சிவனுருவாய தன்றே"

அரசனும் தான் வேண்டியதை மன்னிக்கும்படி யுமாபதி சிவத்தைப் பிரார்த்தித்து அவரை யரதன முதலியவற்றைக் கொண்டு பூசித்துச் சென்றனன் — பெத்தான் சாம்பான் என்னது அவர் பெயர் பெற்றான் சாம்பான் என்பார் பலருளர்.

உமாபதிசிவமியற்றிய கிரந்தங்களில் கோயிற் புராணமொன்றென்று சொன்னேன் — அவர் அப்புராணத்தை யியற்றிப் பேடகத்து வைத்திருந்தனர். பரமசிவம் உமாபதிசிவத்தின் பெருமையை யவனியிலுள்ளார் நன்கறிந்து புகழுமாறு ஒருநாள் தீக்ஷிதர்கள் நடராஜா சந்நிதிப் பூஜைக்குச் சென்ற பொழுது தன்னுருவத்தை மறைத்தருளினர். தீக்ஷிதர்கள் தியக்க முற்று நடராஜனே யெங்கு சென்றனையென்று கதற "உமாபதி பேடகமதனில் மன்னினம் யாம்" என்று ஆகாசவாணி பிறந்தது. உமாபதி சிவத்தினிடத்துச் சென்று தீக்ஷிதர்களிதை யறிவிக்க அவர் பேடகத்தில் கோயிற்புராணந் தாமியற்றியதிருப்பதை யவர்களுக்கறிவித்தருளினர். தீக்ஷிதர்கள் சபையில் இப்புராணத்தை யரங்கேற்ற வேண்டுமென்று பிரார்த்தித்து, புராணத்தைச் சிவிகையிலேற்றி சக

லோபசாரத்துடன் ஊர்வலஞ் செய்து கொண்டுவந்து அரங்கேற்று வித்தார்கள். அப்புராணத்தின் சொன்னேக்கு பொருணேக்கு களைப் புகழாதாரில்லை.

இனி யுமாபதிசிவமியற்றிய நூல்களிற் சிலவற்றைப்பற்றிச் சொல்லுவேன். அவரியற்றிய சைவ சித்தாந்த நூல்களில் முக்கியமானது சிவப்பிரகாசம். சிவஞானபோதத்தை முதனூலென்றும் சிவஞான சித்தியாரை வழிநூலென்றும் சிவப்பிரகாசத்தைச் சார்புநூல் அல்லது புடைநூலென்றுங் கூறுவர். புடைநூலினிலக்கணத்தை நன்னூலார் "இருவர் நூற்குமொரு சிறை தொடங்கித், திரிபு வேறுடையது புடைநூலாகும்" என்றதனுனே யறியலாம். முதனூல், வழிநூலொடு ஒரு சிறையொத்தும் ஒரு சிறை திரிபுவேறுடையதாம். உமாபதிசிவம் நூன்மரபும் நூற்பெயருஞ் சொல்லுமிடத்து

"தெரித்தகுரு முதல்வருயர் சிவஞானபோதஞ்
செப்பினர் பின்பவர் புதல்வர் சிவஞானசித்தி
விரித்தனர் மற்றவர்க டிருவடிகள் போற்றி
விளம்பிய நூலவை யிரண்டும் விரும்பிநோக்கிக்
கருத்திலுறை திருவருளு மிறைவனூலுங்
கலந்து பொதுவுண்மை யெனக்கருதி யானும்
அருத்தி மிகவுரைப்பன் வளர்விருத்த நூறு
மாசில் சிவப்பிரகாச மாகுமன்றே"

இதில் "விளம்பிய நூலவையிரண்டும் விரும்பி நோக்கி" யென்பது ஒரு சிறையொத்துக் கூறுதலைச் சுட்டும் "கருத்திலுறை திருவருளுமிறைவனூலுங் கலந்து" என்பது திரிபு வேறுடைமையைச் சுட்டும். இதையறியாத வுரையாசிரியர் மேற்கண்ட மூன்று நூலிலும் சொல்லப்பட்டிருப்பன வொன்றேயெனக் கொண்டு ஒற்றுமைப்படுத்த முயலுவர். பொது, உண்மை யென்னும் பகுதிகள் இந்நூலிலுள்ளது. இதை நோக்கிச் சிவஞானபோதம், சிவஞான சித்தியாரையும் உரையாசிரியர் சிலர் பொது, உண்மை யெனப் பிரிப்பர். அப்பாகுபாடு அந்நூலாசிரியர்களுக்கு உடன்பாடோ அன்ருே வென்பதைத் தனியே யொரு வியாசத்தில் ஆராய்வேன். உரையாசிரியர்கள் அவ்வாறே கொண்டன இன்னும் பலவுள.

உமாபதிசிவத்தின் காலத்திலும் ஏகாத்ம வாதம் சைவர்களால் எவ்வளவு வெறுக்கப்பட்டதென்பது போற்றிப்பஃறொடையில் ஓரிடத்தில்

* * * * * "எல்லாம்போய்த்
தம்மைத்தெளிந்தாராய்த் தாமே பொருளாகி
யெம்மைப் புறங்கூறி யின்புற்றுச்—செம்மை
யவிகாரம் பேசுமகம் பிரமக்காரர்
வெளியாமிருளில்விடாதே"—யென்றும்,

நெஞ்சுவிடுதூதில்,

"உலகாயதன் பாலுறாதே - பலகாலுந்
தாம்பிரமங் கண்டவர் போற்றம்மைக் கண்டாங்கதுவே
நான் பிரமமென்பவர் பானண்ணுதே"

யென்றும் சொல்லியிருப்பது காட்டும்.

உமாபதிசிவமியற்றிய சங்கற்ப நிராகரணத்தில் (1) மாயா வாதம் (2) ஐக்கியவாதம் (3) பாடாணவாதம் (4) பேதவாதம் (5) சிவசமவாதம் (6) சிவசங்கிராந்த வாதம் (7) ஈஸ்வர அவிகார வாதம் (8) நிமித்தகாரண பரிணாமவாதம் (9) சைவ வாதமென்பன மறுக்கப்பட்டுள்ளன. இந்நூலை யியற்றியது சகம் 1235-ல் அதாவது கி. பி. 1313-ல் என்பது அவர் நூலில் "ஏழஞ்சிருநூறு எடுத்தவாயிரம், வாழூநற் சகனமருவா நிற்ப" என்பதனாலறியலாம். இந்நூல் அவரால் கடைசியில் இயற்றப்பட்டதென முன்னரே சொன்னேன். இவர் பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பாதியிலும் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமிருந்தவராவர். சந்தானசாரியர்கள் நால்வரும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதி வரை யிருந்தவராவர்.

உமாபதிசிவமியற்றிய பௌஷ்கராகம விருத்தி மிகவுமருமையானது. அதை யுலகத்துக்குபகரிக்குமாறு ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகள் அச்சிட்டு வருகின்றனர். இவர் போன்றார் சிலர் இலரேல் சைவமதம் மிகவும் குன்றிப்போயிருக்கும்.

அடியார்க்கடியன்.

---

## திருவாரூர் பங்குனி உத்தர மகோற்சவம்

**(இந்து சாதனம்)**

(68-ம் பக்கத் தொடர்ச்சி)

விறன்மிண்ட நாயனர், சுந்தரமூர்த்தி நாயனர் அடியாரை வணங்காது ஒருபிரகாரம் ஒதுங்கிச் சென்றனர் என்று அடியாரை வணங்காத சுந்தரனும் அவனை வலிந்து ஆட்கொண்ட தியாகேச

ரும் அவ்வடியார்க்குப் புறகு என்று கூறியமையும், எந்நாள் இவ் வடியார்க் கடியானகு நாள் என்று சிந்தித்துச் சென்ற சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடியருளியதும் திருவாரூரிலேயே.

பேசும் பெருமையவ் வாரூரனையும் பிரானவனு
மீசன் றனையும் புறகுதட்டென்றவ னீசனுக்கே
நேசனெனக்கும் பிரான்மனைக்கே புகநீடு தென்றல்
வீசும்பொழிற் றிருச்செங் குன்றமேய விறன்மிண்டனே.

இனி, சைவசமயாசாரியர்களி லொருவராகிய சுந்தரமூர்த்தி நாயனரும் பரவையாரை விவாகஞ் செய்து திருப்பதிகங்களைப் பாடி யோகபரம்பரையில் வைகியதும், இத்திருவாரூரின் கண்ணேயே.

"தென்னாவ லூர்மன்னன் றேவர்பிரான் றிருவருளான்
மின்னாருங் கொடிமருங்குற் பரவையெனு மெல்லியறன்
பொன்னாரு முலையோங்கற் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோகப் பரம்பரையின் விரும்பினார்."

"தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு
மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார்."

"தொல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகர்
அல்லறீர்த் துலகுய்ய மறையளித்த திருவாக்காற்
றில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேனென்
றெல்லையில்வண் புகழாரை யெடுத்திசைப்பா மொழிகென்றார்."

"ஆரத்தே திருக்கூட்டம் பலமுறையாற் றொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றேத்தி நின்றழியா
வீரத்தா ரெல்லார்க்குந் தனித்தனிவே றடியேனென்
றூர்வத்தாற் றிருத்தொண்டத் தொகைப்பதிக மருள்செய்தார்."

எனவருஞ் செய்யுட்களானறிக.

பெரிய புராணத்திற் கூறிய மநுநீதிகண்ட சோழமகாராசா தன்னுடைய ஏக புத்திரனைத் தேர்க் காலிலிட்டுத் தேரை நடாத்திய செயற்கருஞ் செயலும் இத்திருவாரூரின் கண்ணேயே நிகழ்ந்த தெனவறிக. அதனை,

"ஒருமைந்தன் றன்குலத்துக் குளனென்பது முணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்."

"தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்."

## சோமாஸ்கந்தமூர்த்தி பூமிக்குவந்த வரலாறு.

"முன்னொரு நாளிலே, திருக்கைலாச மலையிலுள்ள சோலையிலே சிவபெருமானும் உமாதேவியாரும் எல்லையில்லாத மகிழ்ச்சியோடு வீற்றிருந்தார்கள். அங்குள்ள வில்வமரங்களின் கிளைகளிலே முசுவின் கூட்டங்கள் தங்கின. அவற்றுள் முனிவர்களைப்போல உட்கார்ந்திருக்கின்ற ஒரு ஆண்முசு அவரிருவர்மீதும் அளவிறந்த வில்வ பத்திரங்களைப் பறித்துச் சொரிந்துகொண்டிருந்தது. அதனை உமாதேவியார் பொறாராய்ச் சிறிது சினஞ்செய்தார். அவருடைய செய்கையைச் சிவபெருமான் பார்த்து, "சத்தியே இங்கே நம்மை அருச்சனை செய்கின்ற இம்முசுவை நீ கோபிப்பதென்னை? இதனைத் தவிருதி" என்றார். என்னலும், உமையம்மை கோபமிலராகி அதற்கருள்புரிந்தார். கைலாசபதி அம்முசுக்கலையின் மனத்திலுள்ள அஞ்ஞானத்தைக் கெடுத்து மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருளினர். ஞான முதிக்கப்பெற்ற முசுக்கலை வில்வமரச் சினையினின்றும் விரைந்திறங்கி, மனநடுங்கி, பரமபிதா மாதாக்களாகிய பார்வதி பரமேஸ்வரர்களை அன்போடு வணங்கி, "பொய்யடியேனாகிய தமியேன் செய்த பிழையைப் பொறுத்தருளும்" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் அதனைக்கேட்டு "நீ செய்த இதைப் பிழையென்று சொல்லற்க, சிறந்த வில்வ பத்திரங்களைக் கொண்டு நம்மைப் பூசனை செய்தாய். அதனால் நீ மனு வமிசத்திற் பிறந்து உலக முழுதையும் அரசாள்வாய்" என்று அருள்புரிந்தார். முசு அத்திருவாக்கைக் கேட்டு, மிகுந்த துன்பத்தையடைந்து விம்மி இரங்கி, நடுங்கி எழுந்து, சிவபெருமானை வணங்கி நின்று, "எம்பெருமானே, அடியேன் உங்களை நாடோறும் தரிசனஞ் செய்துகொண்டு அழியாத பேரானந்தப் பெருஞ் செல்வத்தோடு இங்கே யிருத்தலைவிட்டுப் பூமியிற்போய் அழியுமியல் பினையுடைய அச்செல்வ வலையில் அகப்படுவேனாயின், மீட்டும் எவ்

வாறு பிழைப்பேன்" என்றது. அதனை எம்பெருமான் கேட்டு, "முசுவே, உன் மனக்கிடக்கை நன்று! நீ இப்போது பூமிற் போய் அரசாண்டிருந்து பின்பு நம்மிடத்து வருதி. வருந்தி வேறொன்றையும் நினையாதே" என்று திருவாய்மலர்ந்தார். அப்பொழுது அம் முசுக்கலை "எம்பெருமானே, பொய்யை மறைத்த புலால்மயமாகிய இவ்வுடம்பைப் பேணி அம்மானுடப் பிறப்பிலே செய்வன தவிர்வன அறியாது மயங்காவண்ணம் இம்முசுவின் முகத்தோடு பிறக்கும்படி அடியேனுக்குத் திருவருள் புரியும்" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் அவ்வரத்தை அதற்குக் கொடுத்தருளினர். அம்முசுக்கலை திருக்கைலாச மலையை நீங்கிப் பூமியில் வந்து, வருவாய் குன்றச் செல்வங்கள் சுருங்கியும் அதனல் மிகுந்த துன்பத்தை அனுபவித்தும் சத்தியத்தை நிலை பெறுத்திப் பூமியை ஆண்ட அரிச்சந்திர மகாராஜனுக்கு ஒர் வழித்தோன்றலாய், முகமொன்று மாத்திரம் முசுவினுருவும் மற்றை அவயவங்களெல்லாம் மன்மதனிற் சிறந்த அழகுமுடையதாகிப் பிறந்து, முசுகுந்தன் என்னும் நாமத்தைப் பெற்றிருந்தது. இவ்வாறு பிறந்த முசுகுந்தன் சோழநாட்டிலுள்ள கருவூரிலிருந்துகொண்டு, முடிசூடிப் பூவுலகிலுள்ள எல்லாத் தேயங்களையும் தன்னுடைய தோளின்மேற் சுமந்து, சூரியனிருக்குமிடத்தில் ஒரிளம்பிறை இருந்தாற்போலச் சூரபன்மனுடைய ஆணையைக் கடக்கமாட்டாதவனய் அவனுக்கஞ்சி யொழுகினன். அவன் சுப்பிரமணியக் கடவுள் சூரபன்மனைச் சங்கரித்ததைக் கேட்டுப் பழைய கவலை நீங்கி மிகுந்தவலியைப்பெற்று, தன்னரசுரிமையைச் சிறப்புற நடாத்தியிருந்தான்.

இப்படி முசுகுந்தச் சக்கிரவர்த்தி அரசு செய்திருக்குங் காலத்தில், வலன் என்னும் அசுரன் பல பெருஞ் சேனைகளோடு சென்று விண்ணுலகத்தைச் சூழ்ந்து அடக்க, இந்திரன் சிலநாள் அவனேடு போர்செய்து, அவனை வெல்லமாட்டாதவனய், "முசுகுந்தச் சக்கிரவர்த்தியை அழைத்துக் கொண்டு வருதி" என்று ஒரு தூதுவனை அனுப்பினன். அவன் பூமியில் வந்து இந்திரனுடைய பணியைச் சொல்லுதலும், முசுகுந்தன் அதனைக் கேட்டு, நன்றென்று, வீரவாகு முதலிய வீரர் கூட்டத்தோடும் சுவர்க்க வுலகத்திற் போய், இந்திரனை வணங்கி, தேவசேனதிபதியாந் தலைமையைத் தாங்கி, அவுணசேனைக ளெல்லாவற்றையும் அழித்தான். அவுணசேனைகள் அழிதலும், இந்திரன் சிலநாள் வலாசுரனேடு எதிர்த்து நின்று போர்செய்து, குலிசாயுதத்தினல் அவனைக்கொன்று, வெற்றி

யடைந்து, அக்காரணத்தால் வலாரி என்னும் பெயரைப் பெற்ருன். வலாசுரனை வென்ற இந்திரன் முசுகுந்தச் சக்கிரவர்த்தியை அமராவதியிலுள்ள் தன் கோயிலினுள் அழைத்துக்கொண்டு போய், அவனை நோக்கி, "மகாராசனே என் பகைவர்களைத் தொலைத்து என்னை விண்ணுலக அரசனாக்கினை; வீரத்தையும் மேலாகிய புகழையுந் தந்து எனக்கு உற்ற துணைவனுமாயினை: இதனால் எனக்கு அந்தரங்கமாகிய சுற்றம் நீயல்லையோ!'' என்று பல உபசாரங்களைச் சொல்லி, ஸ்நானஞ்செய்து, வஸ்திரந்தரித்து, விஷ்ணுவினாலே பூசிக்கப்பட்ட தியாகேசப்பெருமானை அருச்சனை செய்தான்.

(இன்னும் வரும்.)

---

## குமரன்

குமரன் எனப் பெயரிய மாசிகச் செந்தமிழ்ப்பத்திரிகையொன்று காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் இவ்வருடம் ஆனிமீ தொடங்கி வெளியிடப்படுகிறது. இதில் கடவுள் பக்தி தேசபக்தி தமிழ் வளர்ச்சி ஜீவகாருணியம் முதலிய பல உத்தமோத்தம விஷயங்கள் மிகவும் எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதி வெளியிடப்படுகின்றன. ஸ்ரீமான்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B. A., L. T., அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் முதலிய மேதாவிகள் இதற்கு விஷயதானஞ் செய்கிருர்கள். இவர்களால் எழுதப்பட்ட "முருகன்" "முல்லைப்பூ" "சமய வாழ்க்கை" என்பன வாதியாய விஷயங்கள் படிக்கப்படிக்க இன்பம் பெருக்குவனவாயிருக்கின்றன. இத்திருக்கூட்டத்தார் இப்பத்திரிகை மாத்திரமன்றி, ஜீவகாருணிய வொழுக்கம் எங்கும் நிறைந்து உலகம் உய்யுமாறு பல துண்டுப் பத்திரிகைகளையும் ஏராளமாக அச்சிட்டு எங்கும் பரப்புகிருர்கள். இத்திருக்கூட்டமும் "குமரன்" என்னும் பத்திரிகையும் குன்றமெறிந்த குமரேசன் திருவருளால் நாளுக்கு நாள் அதிதீவிரமாக அபிவிருத்தியடைந்து அதனால் உலகம் உய்கவெனத் திருவருளைச் சிந்திக்கின்ருேம். ப. ர்.

---

உ

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆ முதல் 1919ஆ வரையில் வெளிவந்தவை.) | | | |
| காலிகோ கட்டடம் செய்தது விலை | 6 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | 0 | 1 | 0 |
| ஞானானந்த சம்பாஷணை | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | 0 | 1 | 6. |
| சிவநின்மாலிய மான்மியம் | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | 0 | 4 | 0 |

---

# பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப்படும்.

# தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி புதன் சனிக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினங் சிங்கப்பூர் மலாகா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா ரிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு ரிங்கி 5.50 மூன்று மாதத்திற்கு ரிங்கி 3.00. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்து ரோட்,
கோலாலம்பூர்.

---

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டியிருப்பதனாலும், இத்தமிழ்நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயாயிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபிவிருத்திக்கு இன்றியமையாத கருவியாயிருப்பதனாலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

---

Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.